## 75

# “மற்றும் அவர் புறப்பட்டார்” (1)

## படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #31

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).
- E. செவ்வாய்க்கிழமை: “கேள்விகளின் பெரியநாள்” (தொடர்ச்சி).
  - 5. ஒரு விதவையின் காணிக்கை (மாற். 12:41-44; லூக். 21:1-4).
  - 6. திரளான கூட்டத்தாருக்கு ஒரு உரை.
    - a. இயேசு புறஜாதியாரால் தேடப்படுதல் (யோவா. 12:20-22).
    - b. இயேசுவுக்கு வரவிருந்த மரணம் - யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருதிறத்தாருக்குமானது (யோவா. 12:23-36).
    - c. இயேசு யூதர்களால் புறக்கணிக்கப்படுதல் (யோவா. 12:37-50).
  - 7. எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை பற்றி அப்போஸ்தலர்களுக்கு உரை.
    - a. விளக்கங்களும் வினாக்களும் (மத். 24:1-3; மாற். 13:1-4; லூக். 21:5-7).
    - b. எருசலேமின் அழிவு பற்றிய போதனை.
      - (1) எருசலேமின் அழிவுடன் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் (மத். 24:4-14; மாற். 13:5-15; லூக். 21:8-19).

### அறிமுகம்

செவ்வாய்க்கிழமை, கடைசியில் ஒரு முடிவை நோக்கி வந்துகொண்டிருந்தது. இயேசுவுக்கும் அவரது விரோதிகளுக்கும் இடையில் நிகழ்ந்த சச்சரவு முடிந்தது. கிறிஸ்து - தேவாலயத்தை விட்டு என்றென்றைக்குமாக - புறப்படும் நிலையின் விளிம்பில் இருந்தார். இந்தப் பாடத்தில், நாம் “விதவையின் துட்டுக்கள்,” இயேசுவைத் தேடிய கிரேக்கர்கள் மற்றும் தேவாலயத்தின் அழிவு பற்றிக் கர்த்தரின் திகைக்கச் செய்யும் அறிவிப்பு ஆகியவற்றைப் பற்றிப் படிப்போம்.[1]

## தேவாலயத்தில் ஆய்வு
## (மத். 12:41-44; லூக். 21:1-4)

*வார்த்தைகளின் யுத்தத்தைத் தொடர்ந்து, இயேசு பெண்களின் முற்றத்திற்குப் பின்வாங்கிச் சென்றார்.[2] அங்கே அவர், மக்கள் தங்கள் பணத்தை காணிக்கைப் பெட்டிகளுக்குள் போடுவதைக் கவனித்தார். அவர், "தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம்" ஆன இரண்டு செப்புக்காசு களைப் போட்ட ஒரு விதவையின் காட்சியால் இருதயம் தொடப்பட்டார். அவர் அசைக்கப்பட்டார் மற்றும் தம் அப்போஸ்தலர்களிடத்தில் அவளைப் புகழ்ந்தார் (மாற். 12:42-44; லூக். 21:2-4).*

*இருதயத்தைத் தொடும் இந்தக் காட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது எதற்காக? ஒருவேளை இது இயேசுவை அழிக்கத் தீர்மானம் செய்திருந்தவர் களுக்கு ஒரு நேர்மாறு என்பதை நோக்கங் கொண்டதாக இருந்திருக்கலாம். இந்தப் பெண், தேவன்மீது கொண்டிருந்த அன்பினிமித்தம் தேவாலயத் திற்கு வந்திருக்கையில், சதுசேயர்களும் பரிசேயர்களும் இயேசுவின்மீது கொண்டிருந்த வெறுப்பினிமித்தம் அங்கிருந்தனர். B. S. டீன் அவர்கள், "[மத். 23ன்] மாபெரும் கண்டனங்களைத் தொடர்ந்து நடைபெற்ற இந்த அழகுமிகுந்த நிகழ்ச்சியானது, பனிக்கட்டி மலையின் மடியில் பூத்த ஒரு வயலட் மலரைப்போலக் காணப்படுகிறது" என்று விளக்கம் அளித்தார்.[3]*

## தேவாலயத்தில் புறக்கணிக்கப்படுதல்
## (யோவா. 12:20-50)

***புறஜாதியாரால் தேடப்படுதல் (வ. 20-36)***

*ஒரு சில நாட்களுக்கு முன்பு, பரிசேயர்கள் இயேசுவைப்பற்றி, "... உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே" என்று கூறியிருந்தனர் (யோவா. 12:19). அடுத்த நிகழ்ச்சியானது கிறிஸ்துவைக் குறித்த உலகளாவிய விருப்பத்தை விவரிக்கிறது: கர்த்தர் தேவாலயத்தில் இருக்கையில், கிரேக்கரில் சிலர் அவரைத் தேடி வந்தனர்.[4] இந்தப் புறஜாதியார் அவரது தோழமையை நாடியிருக்கையில், அவரது விரோதிகள் அவரது உயிருக்குக் குறிவைத்து நாடினர்.*

*கிறிஸ்து கிரேக்கர்களை முகமுகமாய் சந்தித்தது பற்றிய பதிவேடு எதுவும் நமக்கில்லை; ஆனால் எல்லா மக்கள்மீதும் அவர் கொண்டிருந்த அன்பை அறிந்துள்ள நாம், அவர் அதைச் செய்தார் என்று யூகிக்கலாம். இருப்பினும் மீண்டும் ஒருமுறையாக, நமது ஆர்வத்தைத் திருப்தி செய்தல் என்பது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் நோக்கமாக இருந்ததில்லை. [கிரேக்கர்கள் இயேசுவைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பிய] அந்த வேண்டுகோளினால் தூண்டப்பட்ட பிரசங்கமே யோவான் பதிவு செய்த விஷயமாக இருந்தது. அந்த உரையில் உள்ள ஒரு திறவுகோல் வசனப் பகுதி யானது வசனம் 32ல் உள்ள தைரியமான அறிவித்தலாக உள்ளது: "நான் பூமி யிலிருந்து [சிலுவையின்மீது] உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும்*

என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்." "எல்லாரையும்" என்பது யூதர் களையும் புறஜாதிகளையும் அர்த்தப்படுத்துகிறது.

இந்தப் பிரசங்கத்தின் முடிவில் இயேசு, "அவர்களை விட்டு மறைந்தார்" என்று யோவான் கூறினார் (வ. 36ஆ). KJV மற்றும் 1977ம் ஆண்டில் வெளியிடப்பட்ட NASB ஆகிய வேதாகமங்கள், அவர் ''புறப்பட்டுச் சென்றார்'' என்று கூறுகின்றன. கர்த்தருடைய வெளிப்படையான போதனை முடிந்திருந்தது.

### யூதர்களால் புறக்கணிக்கப்படுதல் (வ. 37-50)

கிறிஸ்து புறப்பட்டுச் சென்றதைத் தொடர்ந்து யூத இனத்திற்குக் கர்த்தரின் ஊழியம் பற்றிய ஒரு தொகுப்புரையை யோவான் குறிப் பிட்டார்: அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை (வ. 37). கிறிஸ்துவை அவர்கள் புறக்கணித்த நிகழ்ச்சியானது ஏசாயா 6:10 மற்றும் 53:1 ஆகியவற்றின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியது என்று யோவான் வலியுறுத்தினார். பின்பு இந்த அப்போஸ்தலர் பின்வரும் ஒளிவுமறைவான விளக்கத்தைக் கூடுதலாக எழுதினார்:

> ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப் படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் (யோவா. 12:42, 43).

இயேசு அற்புதங்களை நிகழ்த்தியிருந்ததை யூதத்தலைவர்கள் அறிந்திருந்தனர் (யோவா. 11:47), ஆனால் அந்த அறிவானது அவர்களின் உறுதியான செயல்விளைவு எதையும் கொண்டிருந்ததில்லை. விஷயம் ஏன் அவ்வாறு இருந்தது என்பதை இப்போது யோவான் வெளிப்படுத்தினார். அற்புதங்கள் அவர்களில் பலர்மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது,[5] ஆனால் அவர்கள் தங்களின் விசுவாசத்தை மறைத்து வைத்திருந்தனர். அவர்கள் - தங்களை, நாட்டின் மத ரீதியான, பொருளாதார ரீதியான, சமூக ரீதியான மற்றும் அரசியல் ரீதியான வாழ்விலிருந்து துண்டித்துப்போடும் செயலான - "ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படுதல்" என்பதைத் தவிர்க்க விரும்பினர்.[6]

யோவான் 12:42ம் வசனம், அறிக்கையிடுதலின் முக்கியத்துவத்தை அடிக்கோடிடுகிறது. நமது இருதயங்களிலுள்ள விசுவாசம் நமது உதடு களிலும் இருக்க வேண்டும் (ரோமர் 10:9, 10). நாம் அவரை அறிக்கையிட மறுத்தால், அவர் நம்மை ஒப்புக்கொள்ள மாட்டார் (மத். 10:32, 33).[7]

தேவன் என்ன நினைத்தார் என்பதைக் காட்டிலும் மனிதர்கள் என்ன நினைத்தனர் என்பதையே அதிகாரிகள் அதிகம் பொருட்படுத்தினர் என்பது கவலைக்குரியதாயிருந்தது: "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்." நாம் என்ன

செய்ய வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றார்கள் என்பதற்கும் நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் என்பதற்கும் இடையில் நாம் யாவரும் இறுக்கத்தை உணர்ந்துள்ளோம். முன்னுரிமைகளைப் பற்றிய கேள்வியானது முக்கியமான பிரச்சனையாகவே நிலைத்துள்ளது. பவுல், "... நான் மனுஷரையா, தேவனையா ... யாரைப் பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா. 1:10) என்று எழுதினார்.

யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தது பற்றிய யோவானின் கவனிப்புகளுக்குப் பின்பு அவர், கர்த்தர்மீது விசுவாசம் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் அவ்வாறு செய்யத் தவறுவதால் ஏற்படுகிற விளைவுகள் பற்றி கர்த்தரால் கூறப்பட்ட கூற்றை மேற்கோள் காண்பித்தார் (யோவா. 12:44-50). இந்த வார்த்தைகளைக் கிறிஸ்து எப்போது பேசினார் என்று நாம் அறிவதில்லை.[8] இவற்றில் அவர், யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் முன்பே அறிமுகப்படுத்தப்பட்ட பல்வகை ஆய்வுக்கருத்துக்களைத் தொடர்ந்தார்:

- வசனங்கள் 44, 45, 49 மற்றும் 50ல், அவர் யோவான் 5ல் கூறியிருந்தது போன்றே, தமக்கும் தமது பிதாவுக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவை வலியுறுத்தினார்.[9] இவ்விதமாக அவர், தம்மைப் புறக்கணிக்கின்றவர்கள் தேவனையே புறக்கணித்த குற்றத்தில் இருந்தனர் என்பதை வலியுறுத்தினார்.
- வசனம் 46ல் அவர், யோவான் 8:12ல் அறிமுகப்படுத்தப்பட்டு, யோவான் 9ல் விரித்துரைக்கப்பட்டு யோவான் 12:35, 36ல் குறிப்பிடப்பட்ட ''உலகிற்கு ஒளி'' என்ற கருத்தை எடுத்துக் கொண்டார்.[10]

இயேசுவின் கூற்றில், வசனங்கள் 47, 48ல் நாம் கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொள்ளாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள (விசுவாசிக்க) முடியாது என்ற சத்தியத்தின் வல்லமைமிகுந்த வசனப் பகுதியைக் கொண்டுள்ளோம்.

> ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன்.[11] என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.[12]

# தேவாலயத்தை விட்டுப் புறப்படுதல்
# *(மத். 24:1-14; மாற். 13:1-15; லூக். 21:5-19)*

***திகைக்கச் செய்யும் ஒரு விளக்கம் (மத். 24:1-3; மாற். 13:1-4; லூக். 21:5-7)***

*''உயர்த்தப்படுதல்'' பற்றிய இயேசுவின் உரைக்குப் பின்பு அவர் "புறப்பட்டுச் சென்றார்" [இது தமிழ் வேதாமகத்தில் "அவர்களை விட்டு மறைந்தார்'' என்றுள்ளது] (யோவா. 12:36), ''தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்'' (மாற். 13:1அ; மத். 24:1அ-வைக் காணவும்). தேவாலயத்திலிருந்து கிறிஸ்துவின் புறப்படுதல் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. தேவனுடைய மகிமை (இயேசு[13]) ஒருக்காலும் திரும்பி வராதபடி புறப்பட்டுச் சென்றிருந்தது.[14] அதிலிருந்து பல பத்தாண்டுகள் கழித்தே தேவாலயம் அழிக்கப்பட்டது என்றாலும், அதன் முடிவு முத்திரையிடப் பட்டிருந்தது (மத். 23:37, 38ஐக் காணவும்).*

*கிறிஸ்து தேவாலய வளாகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில், அவரது சீஷர்கள் - வெளியிலிருந்து அந்த நகரத்திற்கு வந்தவர்கள் என்ற வகையில் - தங்களைச் சுற்றியிருந்த கட்டிடங்களின் வனப்பையும் வானுயர்ந்த தன்மையையும் பற்றிக் குறிப்புகளை வெளியிட்டனர். அவரது சீஷர்களில் ஒருவர் அவரிடத்தில், "போதகரே, இதோ, இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது! இந்தக் கட்டிடங்கள் எப்படிப்பட்டது பாரும்" என்றார் (மாற். 13:1). மற்றவர்கள், "சிறந்த கற்களினாலும் காணிக்கைகளினாலும்[15] தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறதை" குறிப்பிட்டார்கள் (லூக். 21:5).*

*தேவாலய வளாகம் ஒரு மாபெரும் கட்டிட அமைப்பாக இருந்தது, யூதர்கள் அதைக் குறித்துப் பெருமை பாராட்டியது நியாயமாகவே இருந்தது. அது ஏதென்ஸ் நகரில் இருந்த அக்ரோபொலிஸ் என்ற கட்டிடத்தைப் போல் இரு மடங்கானதாக இருந்தது. அது வெண்பளிங்குக் கற்களினாலும் சலவைக் கற்களினாலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது; தூரத்திலிருந்து காணும்போது, அது பனிமூடிய மலைபோலவே இருந்தது. கி.மு. 20ல் மகா ஏரோது தேவாலயத்தை மீண்டும் புதுப்பித்துக் கட்டத் தொடங்கியிருந்தார், அந்தப் பணி, நாம் கலந்துரையாடிக்கொண்டிருக்கும் நிகழ்ச்சி நடைபெற்ற போதும் தொடர்ந்து கொண்டிருந்தது.[16] அநேகமாக, ஒரு திருப்பயணி எருசலேமுக்கு வரும் ஒவ்வொரு முறையும், சில புதிய மற்றும் ஆச்சரியமான கூடுதல்பணி ஏற்படுத்தப்பட்டிருந்தது. தேவாலயத்தை அலங்கரித்த ''காணிக்கைகளை''ப் பற்றி யோசிப்பஸ் என்பவர் எழுதினார். அங்கு அகிரிப்பா அரசரால் பரிசளிக்கப்பட்ட கிரீடங்கள், கேடயங்கள், கோப்பைகள், மற்றும் தங்கச் சங்கிலிகள் ஆகியவை இருந்தன. தங்கத்தினால் ஆன திராட்சச் செடியொன்றில் ஏராளமான திராட்சக் குலைகள் தொங்குவது போன்ற அமைப்பொன்று ஏரோதினால் கொடையாகத் தரப் பட்டிருந்தது.[17] சீஷர்கள் தாங்கள் கண்டவற்றினால் மனம் ஈர்க்கப் பட்டதைக் குறித்து நாம் வியப்படையக் கூடாது.*

*இருப்பினும், அவர்களின் உற்சாகமானது இயேசுவின் பதிலினால் மோதப்பட்டது: "நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும்" (லூக். 21:6).* இதற்கு முன்பு இயேசு, எருசலேம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றின் அழிவைப் பற்றிப் பேசியிருந்தார் (மத். 22:7; 23:38; லூக். 13:35[18]), ஆனால் அந்த குறிப்புகள் பெரும்பாலும் மறைவான சொற்றொடர்களாகவே இருந்தன. இந்த வேளையில், அவரது வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ளக் கடினமானவையாக இருந்தன.

கர்த்தர், "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" என்று கூறினார் (மாற். 13:2ஆ).[19] "யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, அவற்றில் சில கற்கள் ஏறக்குறைய எழுபதடி நீளமும், பன்னிரண்டடி உயரமும், பதினெட்டடி அகலமும் உடையவைகளாயிருந்தன."[20] அந்தக் கட்டிடங்களைக் கண்ணோக்கிய அப்போஸ்தலர்கள், "இந்தக் கற்களில் ஒன்றும் மற்றொன்றின்மீது இருக்கும்படி விட்டுவிடப்படாதா? அது எப்படியாகக் கூடும்?" என்று நினைத்ததை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. இஸ்ரவேல் மக்களின் மதம் மற்றும் மகிமை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் தேவாலயம் என்பது யூதர்களின் கருத்துக்களின் மையமாக இருந்தது. அதன் அழிவு என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது.

இயேசுவும் அவரது பின்பற்றாளர்களும் தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று, கெதரோன் ஆற்றைக் கடந்து, தேவாலயத்தின் கிழக்குப் பகுதியில் இருந்த ஒலிவ மலை என்னும் உயர்ந்த பகுதிக்கு ஏறிச் சென்றனர் - ஒருவேளை, அங்குதான் அவர்கள் தங்கள் இரவுகளில் சிலவற்றைச் செலவிட்டிருப்பார்கள் (லூக். 21:37). சரிவில் அமர்ந்தவாறு அவர்கள் (மத். 24:3அ-வைக் காணவும்), தேவாலயத்தையும் நகரத்தையும் கண்ணோக்கினார்கள், அது "அவர்களுக்கு முன்பாகத் தெளிவாக, சாய்ந்திறங்கும் சூரிய ஒளியினால் நீண்ட நிழல்களைப் பரப்பியிருந்தது."[21] சீஷர்கள், தேவாலய வளாகத்தைக் கீழ்நோக்கிக் கண்ணோக்குகையில் (மாற். 13:3அ), அவர்களின் இருதயங்களில் எரிந்துகொண்டிருந்த கேள்விகள் சரிந்து வெளிவந்தன.[22] அவர்கள் இயேசுவினிடத்தில், "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்டனர் (மத். 24:3; மாற். 13:4; லூக். 21:7 ஆகியவற்றைக் காணவும்).

சீஷர்கள் அநேகமாக, ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றி - தேவாலயத்தின் அழிவைப் பற்றித் தாங்கள் கேட்டதாக நினைத்திருக்கலாம், ஆனால் உண்மையில் அவர்கள் பல நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டிருந்தார்கள். குறிப்பாக அவர்கள், கிறிஸ்துவின் "வருகை" பற்றியும் "உலகத்தின் முடிவு"[23] பற்றியும் கேட்டிருந்தனர். "வருகை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை *parousia* என்பதாக உள்ளது. சுவிசேஷ விவரங்களில் இவ்வார்த்தையானது மத்தேயு 24 (வ. 3, 27, 37, 39)ல் மட்டுமே காணப்படுகிறது.[24] *Parousia* என்பது "ஒரு அரசரின் வருகையைப் பற்றி கிரேக்க மொழியில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப வார்த்தையாக

உள்ளது.''[25] இந்தச் சொற்றொடரைச் சீஷர்கள் பயன்படுத்தியபோது, அவர்கள் அநேகமாக, தாங்கள் ஒரு உலகப்பிரகாரமான ராஜ்யம் என்று தவறாக நினைத்த ஒரு ராஜ்யத்தை இயேசு அமைப்பார் என்பதைத் தங்கள் சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம்.[26] அவ்வாறிருந்தால், "உலகத்தின் முடிவு'' என்பது (அவர்களின் சிந்தையில்) அப்போதைய அரசியல் அமைப்பின் முடிவாக (அதாவது, ரோமர்களால் ஆளப்பட்ட வெறுக்கத் தக்க ஆட்சியின் முடிவாக) இருந்திருக்கும். அப்போஸ்தலர்கள், மேசியாத் துவ ராஜ்யத்தின் தொடக்கம் (அதாவது அவர்கள் கற்பனை செய்திருந்த வகையிலான அது) தவிர, வேறு எதையும் தேவாலயத்தை அழிப்பதற்குப் போதுமான பேரழிவான நிகழ்ச்சியாகக் கற்பனை செய்ய முடியாதிருந்த படியால், இந்தக் கேள்விகளை ஒன்றுகூட்டி வகைப்படுத்தி இருந்திருக்க லாம். இயேசுவின் பதிலை நாம் படிக்கையில், அவரது பதிலானது தேவாலயத்தின் அழிவுடன் கூட அதிகமானவற்றைச் சுற்றிப்பிணைத் திருந்தது என்பதை நாம் உணர்ந்தறிவது அவசியமாக உள்ளது.

**தீவிரமான வாக்குவாதம்**

சீஷர்களின் கேள்விக்கு மத்தேயு 24:4-25:46ல் (மாற். 13:5-37; லூக். 21:8-36ஐயும் காணவும்) கிறிஸ்துவின் பதிலானது, பதிவுசெய்யப்பட்ட அவரது உரைகளில் நீளமான ஒன்றாக - மற்றும், அநேகமாக அவரது மிகவும் நேர்மாறான உரையாக - உள்ளது. மத்தேயு 24ம் அத்தியாயமானது, இயேசுவின் இரண்டாம் வருகையின் "அடையாளங்களை'' கண்டுபிடிப் பதற்கு ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களால் பயன்படுத்தப்படுகிறது.[27] இயேசு எப்போது மீண்டும் வருவார் என்பதை எவரொருவரும் அறிய முடியாது என்று இயேசு கூறியிருந்த (மத். 24:36) போதிலும், அவர்கள், தற்காலத்திய பஞ்சங்களையும் யுத்தங்களையும் கர்த்தரின் வருகை உடனடியானதாக உள்ளது என்பதற்கான "அடையாளங் களாக'' சுட்டிக் காண்பிப்பதில் மகிழ்வடைகின்றனர்.

நாம் மத்தேயு 24 மற்றும் அதன் தொடர்பான பிற வேதவசனப் பகுதிகள் பற்றிய நமது படிப்பை அணுகுகையில், ஒருவர் எவ்வித அணுகுமுறையை மேற்கொண்டாலும், இது ஒரு கடினமான வசனப்பகுதி யாக உள்ளது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இயேசு, "யூதர்களின் பொதுவான வெளிப்படுத்துதலின் உருவகத்தை'' பயன்படுத்தி னார் என்பது இதற்கு ஒரு காரணமாக உள்ளது.[28] வெளிப்படுத்துதலின் இலக்கியமானது தனது செய்தியைத் தெரிவிப்பதற்கு விரிவான (பெரும் பாலும் வினோதமான) அடையாளங்களைப் பயன்படுத்தியது. யூதர்கள் வெளிப்படுத்துதலின் மொழிநடைக்கு நன்கு பழக்கப்பட்டவர்களாக இருந்தனர். தானியேல் போன்ற ஏவுதல் பெற்ற புத்தகங்களில் வெளிப்படுத் துதலின் அடையாளம் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதுடன் கூடுதலாக, பழைய ஏற்பாட்டின் முடிவு மற்றும் இயேசுவின் பிறப்பு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட நூற்றாண்டுகளில் ஏவுதல் பெற்றிராத வெளிப்படுத்துதலின் ஆய்வுக்கட்டுரைகள் ஏராளமாயிருந்தன. நம்மில் பெரும்பாலானவர்கள் இவ்வகையான உருவகத்திற்குப் பழக்கமற்றவர்களாக இருப்பதால்,

அர்த்தத்தைக் கண்டறிதல் என்பது பெரும்பாலும் நமக்குக் கடினமாக உள்ளது.

கர்த்தர் ஒரு கேள்விக்கல்ல, ஆனால் பல கேள்விகளுக்குப் பதில் அளித்தார் என்ற உண்மையானது இந்தச் சிரமங்களுக்கு இன்னொரு காரணமாக உள்ளது: எருசலேமின் அழிவைக் குறித்த கேள்விகள் *மற்றும்* அவரது இரண்டாம் வருகை குறித்த கேள்விகள். கி.பி. 70ல் என்ன நடைபெறும் என்பது பற்றிய அவரது கூற்றுக்களும் உலக முடிவில் என்ன நடைபெறும் என்பது பற்றி அவரது கூற்றுக்களும் ஒன்றின் மீதொன்று கவிந்து, ஒன்றுகலந்துள்ளன. இவற்றிற்கு இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்துவதென்பது பெரும்பாலும் கடினமாக உள்ளது. அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு ஒப்புவமையானது பின்வருமாறு உள்ளது: இரண்டு மலையுச்சிகள் - ஒன்று சமீபத்தில் உள்ள அருகாமையிலான சிறியது மற்றொன்று தூரத்தில் உள்ள பெரியது - இவற்றின் உருவங்கள் நமது கண்ணோக்கிடத்திலிருந்து பார்க்கையில் ஒன்றாகக் கலந்து தெரிகின்றன. எருசலேமின் அழிவும் இரண்டாம் வருகையும் ஆயிரக்கணக்கான வருடங்கள் இடைவெளியில் பிரிக்கப்பட்டிருந்தாலும், அவை இரண்டிற்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு உள்ளதென்று வேதாகமக் கல்வியாளர்களில் பெரும்பாலானவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர்: முதலாவது (எருசலேமின் அழிவு) நிகழ்வானது இரண்டாவது (இரண்டாம் வருகை) நிகழ்வுக்கு ஒரு மாதிரியாக உள்ளது.

இந்தச் சிந்தனைகள் ஒன்றுகலந்துள்ளதாகக் காணப்பட்டாலும், மத்தேயு 24ன் முதல் பாகத்தில் எருசலேமின் அழிவு பற்றிய வலியுறுத்தம் உள்ளதாகவும், பிந்திய பாகத்தில் இரண்டாம் வருகை பற்றிய வலியுறுத்தம் உள்ளதாகவும் பலர் ஒப்புக்கொள்ளுகின்றனர்:

- இவ்வதிகாரத்தின் முதல் பகுதியில் வசனங்கள் 19, 20ஐக் கவனியுங்கள்: ‘‘அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ. நீங்கள் ஓடிப்போவது மாரி காலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள்.’’ குழந்தைகளைப் பெறுவதோ அல்லது பருவகாலமோ அல்லது வாரத்தின் குறிப்பிட்ட ஒரு நாளோ இரண்டாம் வருகைக்கு ஏதேனும் செய்ய வேண்டியதாயிருக்கிறதா? இல்லை. இருப்பினும் இந்தக்காரணிகள் எருசலேமின் அழிவுடன் தொடர்புடைய வகையில் குறிப்பிட்டவைகளாய் இருந்தன.[29]
- பிந்திய பகுதியில், வசனங்கள் 40, 41ல் சிலர் எடுத்துக்கொள்ளப்படுதல் பற்றியும் சிலர் விட்டுவிடப்படுதல் பற்றியுமான கூற்றுக்களைக் கவனியுங்கள். இந்த வசனங்கள் எருசலேமின் அழிவைக் குறித்து ஒன்றும் செய்யாதவைகளாய் இருக்கையில், இவைகள் இரண்டாம் வருகையுடன் தொடர்புடையவைகளாக உள்ளன.[30]

மத்தேயு 24:4-35 (இது எருசலேமின் அழிவை மையப்படுத்தியுள்ளது) மற்றும் 24:36-41 (இது இரண்டாவது வருகையை மையப்படுத்தியுள்ளது) ஆகியவற்றிற்கு இடையில் பல நேர்மாறுகளைத் தரவழைக்க முடியும். அவற்றில் சில, பின்வரும் வரைவட்டவணையில் காண்பிக்கப்

பட்டுள்ளன:[31]

மத்தேயு 24ன் முற்பகுதியானது எருசலேமின் அழிவை மையப்படுத்தியுள்ளது என்றும் அதன் கடைசி வசனங்கள் முக்கியமாக இரண்டாம் வருகையைப் பற்றியதாக உள்ளன என்றும் சில விளக்கவுரையாளர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். இருப்பினும், ஒன்றின்மீதொன்று கவிந்து கொள்ளுதல் நடைபெறுகிறது என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆகையால், எந்த வசனம் முதலாவது நிகழ்ச்சியை உரைக்கிறது மற்றும் எந்த வசனம் இரண்டாவது நிகழ்ச்சியை உரைக்கிறது என்பதைப் பற்றி தன்னிச்சையாக முடிவெடுப்பதில் அவர்கள் சுதந்திரமானவர்களாக இருக்கின்றனர். இது மத்தேயு 24ஐக் கையாள்வதற்கான ஒரு வழிமுறையாக உள்ளது,[33] ஆனால் இந்த அணுகுமுறையை நீங்கள் பயன்படுத்தினால், "இவைகளெல்லாம் சம்பவிக்கும் முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு கூறிய வசனம் 34ஐ நீங்கள் கையாள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். வசனம் 4 முதல் 33 வரையுள்ள பகுதியில் கூறப்பட்டவை அப்போது வாழ்ந்திருந்த சிலரின் காலத்திலேயே நிறைவேற்றப்படும் என்பது, வசனம் 34ஐ கையாளும் இயல்பான வழிமுறையாக உள்ளது.[33] "சந்ததி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது (*genea*) சாதாரணமாக, ஒரு குறிப்பிட்ட காலத்தின் போது வாழ்கின்றவர்களைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 24:34ல் உள்ள கூற்றை இயேசு கூறுவதற்குச் சற்று முன்பு, அவர் தமது உரையைக் கேட்டவர்கள்மீது விழவிருந்த பயங்கரமான விஷயங்களை முன்னுரைப்பதில் அதே வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தார் (மத். 23:36ஐ; மத். 24:34உடன் ஒப்பிடவும்).

மத்தேயு 24:24-33 முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ இரண்டாம் வருகையைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்த விரும்புகின்றவர்கள், வசனம் 34உடன் போராடுகின்றனர். அவர்களில் பலர், அவ்வசனப் பகுதியில் உள்ள "சந்ததி" என்ற வார்த்தை "இனம்" என்று, அதாவது யூத இனம் என்று அர்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். R. T. பிரான்ஸ் அவர்கள், இவ்வசனப் பகுதியானது விளக்கவுரையாளர்களுக்குச் சங்கடமாயிருந்திராவிட்டால், "இந்தப் பெயர்ச்சொல்லுக்கு இப்படிப்பட்ட இயல்பற்ற ஒரு அர்த்தம் கருத்தாகத் தெரிவிக்கப்படவே முடியாது" என்று விளக்கம் அளித்துள்ளார்.[34] ஜேக் P. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இந்த முழு அத்தியாயத்தையும் விளக்கப்படுத்துவதற்கு **சந்ததி** (*genea*) என்ற வார்த்தை மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. ஜெரோமைப் பின்பற்றி ஸ்கோஃபீல்டு அவர்கள், இது யூத இனத்தை அர்த்தப்படுத்தியது என்று நிறைவடைகையில், *genea* என்பது இனத்தை அர்த்தப்படுத்துகிறது என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு சாத்தியக்கூறுள்ள விஷயமே உள்ளது (லூக். 16:8) என்று சொற்பொருள் அகராதி கருத்துத் தெரிவிக்கிறது. *Genos* (இனம்) என்பதற்கும் *genea* (சந்ததி) என்பதற்கும் இடையில் ஒரு வித்தியாசம் உள்ளது.

*Genea என்பது கடைசிச் சந்ததி என்று அர்த்தப்படுத்துவதாக மற்ற சிலர் வாதிட்டுள்ளனர்; அதாவது, அடையாளங்கள் தொடங்கியவுடன், இந்த நிகழ்வுகள் யாவும் ஒரு சந்ததிக்கு மாற்றப்படும் (இ.வ. 23:36). ஆனால் மத்தேயு சுவிசேஷத்தின் வேறு இடங்களில் genea என்பது ஒரு காலத்தில் மற்றும் வழக்கமாக இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மக்களையே அர்த்தப்படுத்துகிறது (1:17; 11:16; 12:39, 41, 45; 23:36; மாற். 8:38; லூக். 11:50; 17:25), மற்றும் இவ்விடத்திலும் இவ்வாறே அர்த்தப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை.*[35]

*தொடர்ந்து வரும் படிப்பில்,[36] வசனம் 34, அதற்கு முந்திய வசனங்களின் நிகழ்ச்சிகள், அந்த வார்த்தைகளைக் கிறிஸ்து பேசியபோது இருந்த சந்ததிக்கு நடக்கவிருந்ததாக அர்த்தப்படுத்தின என்றே எடுத்துக்கொள்ளப் படும்.[37] இந்த அணுகுமுறையில் எழும்பும் சிரமங்கள்[38] வசனப்பகுதியில் அவற்றைச் சந்திக்கும்போது கையாளப்படும்.*

**குறிப்பிடத்தக்க ஒரு தொடக்கம்**
***(மத். 24:4-14; மாற். 13:5-15; லூக். 21:8-19)***

*நாம், மத்தேயு 24 மற்றும் அது தொடர்பான மாற்கு, லூக்கா சுவிசேஷங்களின் வசனப்பகுதிகளைப் பற்றிய நமது படிப்பைத் தொடங்கத் தயாராக இருக்கின்றோம். இந்தப் படிப்பு அடுத்த பாடத்தில் நிறைவடையும்.*

*கிறிஸ்து தமது உரையைப் பல "அடையாளங்களாயிராதவை"களுடன் தொடங்கினார். எருசலேமின் அழிவு என்பது, யூதர்களும் இயேசுவின் தீர்க்கதரிசன நிறைவேற்றத்தை எதிர்நோக்கியிருந்தவர்களும், எந்த ஒரு மற்றும் ஒவ்வொரு விஷயமும் நடக்கவிருந்தது பற்றிய அடையாளமாகவே இருந்தது என்று நினைக்குமளவுக்கு அதிர்ச்சியான நிகழ்ச்சியாக இருந்தது. பின்வரும் விவரிப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்: எனது வீடு அழிந்துபோகும் என்று யாரேனும் முன்னுரைத்தால் - மற்றும் அதை நான் நம்பினால் - ஒவ்வொரு புயலும் என்னைப் பதட்டம் அடையச் செய்யும். கிறிஸ்து, தமது பின்பற்றாளர்கள் தவறாக வழிநடத்தப்படுவதை விரும்பாதிருந்தார் (மத். 24:4; மாற். 13:5; லூக். 21:8அ), எனவே அவர் முதலில், தவறாக வழிநடத்தும் சாத்தியக்கூறுள்ள அடையாளங்களைப் பற்றி முன்னெச்சரிக்கை செய்தார்.*

*கள்ள கிறிஸ்துகள்: கள்ள மேசியாக்கள் எழும்புவார்கள் என்று அவர் கூறினார் (மத். 24:5; மாற். 13:6; லூக். 21:8ஆ; இத்துடன், மத். 24:24; மாற். 13:22 ஆகியவற்றையும் முன்கண்ணோக்கவும்). "அவர்களைப் பின்பற்றாதிருங்கள்" என்று அவர் எச்சரிக்கை செய்தார் (லூக். 21:8இ). அந்த நாட்களில் அவ்வப்போது, ஒரு மனிதர் கவர்ச்சிகரமான உரிமைகோருதலை ஏற்படுத்துவதினால் ஒரு பின்பற்றுதலைக் கவர்ந்திழுக்க முடிந்தது (அப். 5:34-39; 21:38ஐக் காணவும்).*[39]

*யுத்தங்களும் யுத்தங்களின் வதந்திகளும்: யுத்தங்களைப் பற்றிய வதந்திகளும் மற்ற தொந்தரவுகளும், சீஷர்களை பயமுறுத்தக்கூடாது (மத். 24:6அ; மாற். 13:7அ; லூக். 21:9அ). கர்த்தர், "... இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், [எருசலேம் மற்றும் தேவாலயம் ஆகியவை அழிக்கப்படுதல் என்ற] முடிவு உடனே வராது" என்று விளக்கப் படுத்தினார்*

*(மத். 24:6ஆ; மாற். 13:7ஆ; லூக். 21:9ஆ-வைக் காணவும்). இந்த வார்த்தைகள், ரோமப் பேரரசு சமாதானத்தில் இருந்த காலத்தின்போது பேசப்பட்டன; ஆனால் வரலாற்றாளர்களின் கூற்றுப்படி, விரைவிலேயே மீண்டும் யுத்தம் வெடித்தது.*

*இயற்கையான அழிவுகள்:* மேலும் கிறிஸ்து, பஞ்சம், கொள்ளைநோய் மற்றும் பூமியதிர்ச்சி போன்ற இயற்கையான அழிவுகளும் (எப்போதும் இவைகள் உள்ளது போன்றே) இருக்கும் என்றும் குறிப்பிட்டார் (மத். 24:7ஆ; மாற். 13:8ஆ; லூக். 21:11[40]). இவற்றைக் கிறிஸ்து, "இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" என்று அழைத்தார் (மத். 24:8; மாற். 13:8இ-ஐக் காணவும்). "ஆரம்பம்" என்ற வார்த்தை, வசனங்கள் 6 மற்றும் 14ல் உள்ள "முடிவு" என்ற வார்த்தைக்கு நேர்மாறாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இந்த இயற்கையான அழிவுகள் ''முடிவின் அடையாளங்களாய்" இராது.

*சபையுடன் தொடர்புடைய துன்பங்கள்:* இயேசுவைப் பின்பற்றுபவர்கள் துன்புறுத்தப்படுதலை எதிர்பார்க்கும்படி எச்சரிக்கப்பட்டனர் (மத். 24:9; மாற். 13:9அ, 13அ; லூக். 21:12அ, 16ஆ, 17).[41] இருப்பினும் கர்த்தர், அவர்களுடன் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் (லூக். 21:18[42]) மற்றும் அவர்கள் துன்புறுத்தப்படுதலைத் தங்கள் விசுவாசத்தைக் குறித்துச் சாட்சியளிப்பதற்கான ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்க வேண்டும் என்றும் அவர் கூறினார் (மாற். 13:9ஆ, 11; லூக். 21:12ஆ, 13-15).[43] பலரை வஞ்சிக்கின்ற (மத். 24:11; மத். 24:24; மாற். 13:22ஐக் காணவும்) கள்ளதீர்க்கதரிசிகள் (கள்ள போதகர்கள்) என்பவர்கள் இன்னொரு பிரச்சனையாக இருப்பார்கள்.[44] துன்புறுத்தப்படுதல் மற்றும் வஞ்சிக்கப்படுதல் ஆகியவற்றின் காரணமாகச் சில கிறிஸ்தவர்கள் விழுந்துபோவார்கள். சிலர், தங்கள் குடும்ப உறுப்பினர்கள் உட்பட, சக கிறிஸ்தவர்களைக் காட்டிக் கொடுக்கவும் துணிவார்கள் (மத். 24:10, 12; மாற். 13:12; லூக். 21:16அ). "முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று கிறிஸ்து கூறினார் (மத். 24:13; மாற். 13:13ஆ; லூக். 21:19ஐக் காணவும்). அவர்களும் - நாமும் கூட - விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் எவ்வளவாய் ஏங்கினார்!

*சுவிசேஷம் பரவுதல்:* இயேசு, "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது [எருசலேம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றிற்கு] முடிவு வரும்" என்று கூறியதன்மூலம் "அடையாளங்களாயிராதவை"களின் பட்டியலை முடித்து வைத்தார் (மத். 24:14; மாற். 13:10ஐக் காணவும்). பல வாரங்களுக்குப் பின்பு, கர்த்தர் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பாக, தமது அப்போஸ்தலர்களுக்கு, ''உலகமெங்கும்போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து" "சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்ற பிரதான கட்டளையைக் கொடுப்பார் (மாற். 16:15; மத். 28:19). கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள், சுவிசேஷத்தை ''பூமியின் கடைசி பரியந்தமும்" எடுத்துச் செல்லுதல் (அப். 1:8) என்ற சீரிய பணிப் பொறுப்பை எவ்வாறு மேற்கொண்டனர் என்பது பற்றிய வரலாற்றை அப். நடபடிகள்

*கூறுகிறது. இருப்பினும், இவை யாவற்றிற்கும் காலம் தேவைப்படுவதா யிருக்கும். இவ்விதமாகக் கர்த்தர், தேவாலயத்தின் "முடிவு" என்பது எதிர்காலத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்பு வரவிருந்தது என்று வலியுறுத்தி னார். கி.பி. 63ம் ஆண்டில் (அதாவது எருசலேம் அழிக்கப்படுவதற்குச் சுமார் ஏழு ஆண்டுகள் முன்னதாக), சுவிசேஷம் "வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது" என்று பவுலினால் எழுத முடிந்திருந்தது (கொலோ. 1:23[45]).*

## முடிவுரை

*அடையாளங்களாயிராதவைகளையும் தவறாக வழிநடத்தும் சாத்தியக்கூறுள்ள அடையாளங்களையும் பட்டியலிட்ட பின்பு, இயேசு தமது சீஷர்களிடத்தில், எருசலேம் விரைவில் அழிக்கப்படும் என்பதை அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் எவ்வாறு அறிய முடியும் என்பதைப் பற்றிக் கூறினார் (மத். 24:15; லூக். 21:20). மத்தேயு 24ல் அந்தக் கருத்துப் பற்றிய நமது படிப்பை நாம் நமது அடுத்த பாடத்தில் மீண்டும் தொடங்குவோம்.*

*இந்த வேளையில் நீங்கள், இந்தத் தெளிவற்ற அதிகாரத்தைத் தேவன் பாதுகாத்து வைத்துள்ளது ஏன்? என்று வியப்படையலாம். நாம் நமது அடுத்த பாடத்தில் காணப்போகின்றபடி, ரோமப்படைகள் எருசலேம் நகரைச் சூழ்ந்திருக்கும்போது, நகரத்திலிருந்து கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தல் என்பது ஒரு காரணமாயிருந்தது என்பது உறுதி. ஒருவேளை அவர், நமது சிந்தைகளில், கர்த்தர் கூறுவதை நாம் சார்ந்திருக்க முடியும் என்பதை ஆழப்பதியச் செய்ய விரும்பியிருக்கலாம்: அடுத்த பாடத்தில் நாம், "ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு" என்ற அவரது முன்னுரைத்தல் நேர்ப்பொருளில் உண்மையானது பற்றி காண்போம். என்ன நடந்தாலும் விசுவாசத்தில் நிலைத்து இருப்பதற்கான அவசியத்தை வலியுறுத்துதல் என்பது முதன்மையான நோக்கமாக இருந்திருக்கலாம். நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் (மத். 24:13, 42, 44).*

## ஒரு விளக்கம்

*இந்தப் பாடமும் இதற்கு அடுத்த பாடமும், நமது படிப்பு ஒழுங்கமைப்பு தொடர்பாகப் பல அறைகூவல்களை முன்வைக்கிறது. ஒப்பீட்டின் வேத வசனப்பகுதியை ஏறக்குறைய சம அளவான நாற்பது பகுதிகளாகப் பிரித்தல் என்ற எனது இலக்கில் இருந்து ஒரு அறைகூவல் விளைகிறது: இந்தச் செயல்முறையானது ஒப்பீட்டின் இந்தப் பகுதி தவிர மற்ற எல்லா இடத்திலும் பணிக்கு உதவிற்று. பிரித்தலுக்கான நல்ல இடம் ஒன்று இருப்பதில்லை. இவ்விதமாக, படிப்பதற்காக கொடுக்கப்பட்ட வைகளில் நீங்கள் கவனித்துள்ளபடி, இந்தப் பாடம் மத்தேயு 24ன் மீதான ஒரு படிப்பைத் தொடங்குகிறது, இது அடுத்த பாடத்தில் முடிவடையும். ஆகையால் நான் இந்த இரண்டு பாடங்களையும் ஒரு இரண்டு பாகப்*

*படிப்பாகக் கண்ணோக்குகின்றேன்.*

*தொடர்பான ஒரு அறைகூவல்: ஒப்பீட்டின் ஒரு பகுதியின்மீதான வேதாகம வகுப்பு ஒன்றைத் தொடர்ந்து, பாடத்தின் வேத வசனப் பகுதிகளில் ஒன்றின்மீதான பிரசங்கம் என்பதே அடிப்படைத் திட்டமாக உள்ளது. நாம் இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும், மத்தேயு 24ஐ விவரமாகப் படிப்பதால், இரண்டாவது பாடத்துடன் தொடர்புடைய வகையில் பிரசங்கம் ஒன்றிற்குப் பயன்படுத்துவதற்கு தெளிவான வேத வசனப்பகுதி எதுவும் இருப்பதில்லை. ஆகையால், அடுத்த பாடத்தைத் தொடர்ந்து வருகிற பிரசங்கமானது, இந்தப் பாடத்திலிருந்து எடுக்கப் பட்டுள்ளது - அதாவது கிரேக்கர்கள் இயேசுவைத் தேடிய நிகழ்ச்சியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.*

*மாறுபட்ட ஒரு பிரச்சனை: யோவான் 12:20-50ன் நிகழ்ச்சி (அல்லது நிகழ்ச்சிகள்) எப்போது நடைபெற்றன என்பதை நாம் நிச்சயமாய் அறிவதில்லை. இந்த ஒரு நிகழ்ச்சி மாத்திரமே, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வெற்றிப்பிரவேசத்திற்கும் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இராவுணவிற்கும் இடையில் யோவானால் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி யாக உள்ளது. ஆகையால் நாம், தேவாலயத்தில் கிறிஸ்துவின் நடவடிக்கை கள் குறித்து இந்த வேத வசனப் பகுதியை மிகச் சரியாக எவ்விடத்தில் வைப்பது என்று அறிவதில்லை. பல ஒப்பீடுகள் இந்த வரலாற்றை, திங்கட்கிழமை நடைபெற்ற செயல்பாடுகளின் பகுதியாகப் பட்டிய லிட்டுள்ளன. நான் இதை வைத்துள்ள இடம் மிகப் பொருத்தமானதாக எனக்குக் காணப்படுகிறது. (1) இயேசு, ("விதவையின் துட்டுகள்" என்ற முந்திய நிகழ்ச்சியின்போது போலவே) பெண்களின் மண்டபத்தில் இருந்திருந்தால், புறஜாதியார்கள் (கிரேக்கர்கள்) அவர் இருந்த இடத்திற்குச் சென்றிருக்க முடியாது, அவரைத் தங்களிடம் வரும்படி வேண்டுகோள் மாத்திரமே விடுவித்திருக்க முடியும். (2) யோவான் 12:37-50 யூதர்கள் இயேசுவை எவ்வாறு ஏற்றுக்கொண்டனர் - அல்லது மிகத் திட்டவட்ட மாகக் கூறுவதென்றால், அவரை யூதத் தலைவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ளாதிருந்தனர் - என்பதற்கு ஒரு தொகுப்புரையாக உள்ளது. இந்தத் தொகுப்புரையானது கிறிஸ்து கடைசி முறையாகத் தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற நிகழ்வுக்கு ஒரு இயல்பான பின்னணியை வழங்குகிறது.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த மற்றும் இதற்கு அடுத்த பாடங்கள், நாம் பின்பற்றிக் கொண்டுள்ள பாட ஒழுங்கமைப்பிற்கு விசேஷித்த சில அறைகூவல்களை விடுக்கின்றன. [2]பெண்களின் மண்டபம் என்பது தேவாலயப் பொக்கிஷ சாலை இருந்த இடத்திலேயே இருந்தது (மாற். 12:41; லூக். 21:1 ஆகியவற்றைக் காணவும்). தேவாலயத்தின் வரைபடத்தை, "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும். [3]B. S. டீன் அவர்களின் "புதிய ஏற்பாட்டு வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும். [4]இந்த நிகழ்ச்சி, இயேசுவின் ஊழியத்தினுடைய கடைசி நாட்களில் எவ்விடத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதை நாம் உறுதியாக அறிவதில்லை, ஆனால் இது இவ்விடத்தில்*

நன்கு பொருந்துகிறது. [5]யோவான் 12:42ல் உள்ள "அதிகாரிகள்" என்ற சொற்றொடர், ஜெப ஆலயத்தின் அதிகாரிகளைக் குறிப்பிடக் கூடும். இந்த சந்தர்ப்பப் பொருளில், இது அநேகமாக சனதெரீன் சங்கத்தாரைக் குறிக்கலாம். அதிகாரிகளின் மத்தியில் உண்டான விசுவாசம் பற்றிய உதாரணத்திற்கு, யோவான் 8:30, 31; 9:16 ஆகிய வற்றைக் காணவும். [6]"கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் பார்வையற்றிருந்து குணமாக்கப் பட்டிருந்தவர் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்பட்டது பற்றிய விளக்கங்களைக் காணவும் (யோவா. 9:22, 34). ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்படுதல் பற்றி, அதிகாரிகளின்மீதான எதிர்மறையான செயல்விளைவானது, பார்வையற்று இருந்த மனிதனின் மீதான எதிர்மறையான செயல்விளைவைக் காட்டிலும் அதிகமாய் இருந்திருக்கும். [7]மத்தேயு 10:32, 33க்கான ஒரு சுருக்கமான விளக்கவுரையை "கிறிஸ்துவின் வாழ்வு, 3" என்ற புத்தகத்தில் காணவும். அதே புத்தகத்தில் பேதுருவின் "நல்ல அறிக்கைக்கான" சுருக்கமான குறிப்புகளையும் காணவும். [8]இயேசு மக்களிடத்திலிருந்து புறப்பட்டு அவர்களிடமிருந்து தம்மை மறைத்துக்கொண்டார் என்று யோவான் சற்று முன்புதான் கூறியிருந்தபடியால் (யோவா. 12:36ஆ), இந்த வார்த்தைகள் யோவான் 12:23-36அ-வில் உள்ள உரையைத் தொடர்ந்து உடனடியாகப் பேசப்பட்டிராது என்று நாம் யூகிக்கின்றோம். இவைகள் கிறிஸ்துவின் ஊழியத்தின் கடைசி வாரத்தில் எப்போது வேண்டுமானாலும் பேசப்பட்டிருக்கக் கூடும். [9]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "தேவனுக்குச் சமமானவர்" என்ற பிரசங்கத்தில் காணவும். [10]யோவான் 8:12ன் மீதான விளக்கங்களுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும். யோவான் 9 பற்றி, அதே புத்தகத்தில் உள்ள, "நான் பார்வை யற்றவனாக இருந்தேன், ஆனால் இப்போது பார்க்கின்றேன்" என்ற பிரசங்கத்தில் காணவும்.

[11]இதே போன்ற கூற்றொன்று யோவான் 3:17ல் ஏற்படுத்தப்பட்டது. இயேசுவின் "முதல் வருகையானது" ஒரு நியாயாதிபதி என்ற வகையில் இன்றி, ஒரு இரட்சகர் என்ற வகையில் இருந்தது; ஆனால் அவர் தமது இரண்டாவது வருகையில், நமது நியாயதிபதியாக இருப்பார் (மத். 25:31, 32; அப். 17:31). [12]இதை, புத்தகங்கள் திறக்கப்படுதல் மற்றும் "புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மக்கள் நியாயந்தீர்க்கப்படுதல்" ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிற வெளிப்படுத்தின விசேஷம் 20:12உடன் ஒப்பிட்டுக் காணவும். வெளிப்படுத்தின விசேஷம் 20:12 பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு "வெளிப்படுத்தின விசேஷம், 5" என்ற புத்தகத்தில் காணவும். [13]யோவான் 2:11; 8:54 ஆகியவற்றை வாசிக்கவும். [14]1 சாமுவேல் 4:21, 22ஐ வாசிக்கவும். [15]ஆங்கிலத்தில் இவ்விடத்தில், "votive" என்றுள்ளது. "Votive" என்பது "vow" (பொருத்தனை) என்பதற்கான இலத்தீன் வார்த்தையாகும். "Votive gifts" என்பவை பொருத்தனையொன்றின் நிறைவேற்றத்தில் கொடுக்கப்பட்டன. NIVயில் "gifts dedicated to God" என்றுள்ளது. [16]இந்த வேலையானது தேவாலயம் அழிக்கப்படுவதற்கு ஆறு ஆண்டுகள் முன்பு வரையிலும்கூட - கி.பி. 64ல் கூட - முடிவடையாதிருந்தது. [17]தேவாலயத்தைப் பற்றி நாம் அறிந்துள்ளவற்றில் அதிகமானவை யோசிப்பஸ் எழுதிய *யுத்தங்கள்* என்ற புத்தகம் 5:5ல் இருந்து வருகின்றன. [18]மத்தேயு 22:7ன் மீதான விளக்கவுரைகளுக்கு, இந்தப் புத்தகத்தில் "என்ன ஒரு நாள்" என்ற பாடத்தில் காணவும். மத்தேயு 23:38ன் மீதான விளக்கவுரைகளையும் காணவும். லூக்கா 13:35ன் மீதான விளக்கவுரைகளுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும். இயேசு எருசலேமுக்காக அழுதபோது, அதன் அழிவைப் பற்றியும் குறிப்பிட்டார் (லூக். 19:43, 44), ஆனால் அந்த வேளையில் அவரது வார்த்தைகளை அவரது சீஷர்கள் கேட்டிருந்தார்களா இல்லையா என்பது உறுதியற்றதாக உள்ளது. [19]இயேசு எருசலேமுக்காக அழுதபோது

*(லூக். 19:44) இதே கூற்றை எடுத்துரைத்தார். (முந்திய குறிப்பைக் காணவும்.)* [20]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or a Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 619.

[21]Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 225-26. [22]*சீஷர்கள் பொதுவாக இந்தக் கேள்வியைக் கேட்டார்கள் என்று மத்தேயுவும் லூக்காவும் சுட்டிக்காண்பிக்கின்றனர் (மத். 24:3; லூக். 21:7), அதே வேளையில் மாற்கு, திட்டவட்டமாக பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயா ஆகியோரைக் குறிப்பிடுகின்றார் (மாற். 13:3).* [23]KJV*யில் "உலகத்தின் முடிவு'' என்றுள்ளது [தமிழிலும் இதே போன்றுதான் உள்ளது], ஆனால் பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள், "காலத்தின் முடிவு" என்பது மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளுகின்றனர்.* NKJV*யில் "காலத்தின் முடிவு" என்றுதான் உள்ளது.* [24]*இவ்வார்த்தையானது நிருபங்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் வகையில் காணப்படுகிறது (1 கொரி. 15:23; 1 தெச. 2:19; 3:13; 4:15; யாக். 5:7, 8).* [25]Will Ed Warren, Class Syllabus, *The Life of Christ: The Synoptic Gospels,* Harding University, 1991, 96. [26]*இயேசு முன்னதாகத் தமது இரண்டாம் வருகையைப் பற்றி முன்னுரைத்திருந்தார் (மத். 16:27; லூக். 12:40; 17:22-37ஐக் காணவும்). இருப்பினும், அவர் மரித்து உயிர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது என்பதைச் சீஷர்கள் புரிந்துகொள்ளாது இருந்தால், கர்த்தர் தமது இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசியபோது எதை அர்த்தப்படுத்தினார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை.* [27]*மத்தேயு 24ம் அத்தியாயம், மற்றவர்களாலும் தங்கள் போதனையைத் தூக்கி நிறுத்தப் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக இது, கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டபோது கர்த்தருடைய ''இரண்டாம் வருகை'' நடைபெற்றது என்று நம்புபவர்களினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வினோதமான போதனையானது பல கண்டங்களில் சபைகளைப் பிரித்துள்ளது.* [28]A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 173. [29]*இவ்வசனங்கள் மீதான விளக்கவுரையை அடுத்த பாடத்தில் காணவும்.* [30]*அடுத்த பாடத்தைப் படிக்கவும். மத்தேயு 24ன் பிற்பகுதி இரண்டாம் வருகையை மையப்படுத்துகிறது என்பதற்கு, இந்த வசனங்கள் நியாயத்தீர்ப்பு பற்றிய அத்தியாயத்திற்கு (மத். 25) வழிநடத்துகின்றன என்பது இன்னொரு நிரூபணமாக உள்ளது.*

[31]*கூடுதலான நேர்மாறுகள், மத்தேயு 24 மற்றும் இதன் தொடர்பான மற்ற வசனப்பகுதிகளைப் பற்றிய படிப்பில் பிற்பாடு குறிப்பிடப்படும்.* [32]*இதை நீங்கள் செய்ய முடியுமென்றால் மற்றவர்களும் இதைச் செய்ய முடியும் என்பது இந்த அணுகுமுறையின் அபாயங்களில் ஒன்றாக உள்ளது. அது ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களை, மத்தேயு 24ன் முற்பகுதியானது எருசலேமின் அழிவைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசுகிறது என்று சுயவிருப்பப்படி முடிவெடுக்கச் செய்கிறது.* [33]*இதற்குப் பின்பு நாற்பதுக்கும் சற்றுக் குறைவான ஆண்டுகள் கழிந்த பின் எருசலேமுக்கு அழிவு நேரிட்டது - இந்த வார்த்தைகளை இயேசு பேசியபோது வாழ்ந்திருந்த சிலரின் வாழ்வுக் காலத்திலேயே இது நடைபெற்றது.* [34]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 346. [35]Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part 2*, The Living Word Commentary Series, ed. Everett Ferguson (Abilene, Tex.: ACU Press, 1976), 129-30. [36]This study of Matthew 24 is based on a lecture given by Stafford North at the Eastside church of Christ, Midwest City, Oklahoma, 30 September 1997. Other sources will be given in the footnotes and in the notes following the next lesson. [37]*இயேசு தமது*

இரண்டாம் வருகையைக் குறிப்பிடுவதாகக் காணப்படும் மத்தேயு 24:27 வசனமானது இதற்குச் சாத்தியக் கூறான விதிவிலக்காக உள்ளது. [38]அந்த "சிரமங்கள்" மத்தேயு 24:27, 29-31ல் உள்ளடங்குகின்றன, அது எருசலேமின் அழிவுக்குப் பதிலாக இரண்டாம் வருகையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. [39]அந்த நாளில் எழும்பி, பிரிவினைகளை வழிநடத்திக் கொண்டிருந்த தலைவர்கள் பலரை யோசிப்பஸ் குறிப்பிட்டார் (*Wars*, 2.12.4-5; *Antiquities* 20.5.1-2; 20.8.6). [40]லூக்கா சுவிசேஷ விவரமானது, "வானத்திலிருந்து பயங்கரங்களும் மாபெரும் அடையாளங்களும்" என்பதைக் கூடுதலாகக் கூறுகிறது. இந்தச் சொற்றொடர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிடாத எந்த ஒரு இயற்கை அழிவையும் - புயல்கள், பனிக்கட்டி, மழை மற்றும் வெள்ளங்கள் போன்றவற்றை - சுற்றி பிணைக்கின்றன.

[41]சபைக்கு ஏற்பட்ட உபத்திரவங்களைப் பற்றி அப். நடபடிகள் புத்தகமும் இன்னும் புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களும் கூறுகின்றன. [42]அவர்களில் சிலர் கொலைசெய்யப்படுவார்கள் என்று கர்த்தர் ஏற்கனவே சொல்லியிருந்தபடியால் (லூக். 21:16), "உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது" என்ற வாக்குத்தத்தம் (லூக். 21:18), அவர்கள் கொலை செய்யப் பட்டாலும் அழிந்து போகமாட்டார்கள் என்று அர்த்தப்பட வேண்டும். கர்த்தர் அவர்களுக்கு உயிர்த்தெழுதலின் நிறைவான வெற்றியை வாக்குத்தத்தம் செய்து கொண்டிருந்தார். [43]பவுல், அதிபதிகளுக்கும் அரசர்களுக்கும் முன்பாக நின்றார் என்று நாம் அறிவோம் (அப். 26ஐக் காணவும்); ஒருவேளை மற்ற அப்போஸ்தலர்களும் இவ்வாறு நின்றிருக்கலாம். அவர்கள் தங்களைத் தற்காக்க வாதிடும்போது அவர்களின் வார்த்தைகளை ஆவியானவர் ஏவுவார் என்பது நமக்கல்ல ஆனால் அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தமாக இருந்தது. நீங்களும் நானும் மற்றவர்களுக்குப் போதிப்பதற்கு முன்பாக, நாம் தேவனுடைய வசனத்தைப் படித்தாக வேண்டும். [44]இந்த முன்னுரைத்தலின் நிறைவேற்றம் ஒன்றிற்கு, 2 பேதுரு 2:1; 1 யோவான் 4:1ஐக் காணவும். [45]இவ்வசனத்தில் உள்ள "சர்வ சிருஷ்டி" என்பது ரோமப் பேரரசில் இருந்த மக்களைப் பற்றிய அடிப்படைக் குறிப்பைக் கொண்டிருந்தது என்பதைப் பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். லூக்கா 2:1ல், "உலகமெங்கும் குடிமதிப்பு" என்பது ரோமப் பேரரசைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. பேரரசின் ஒவ்வொரு பகுதியிலும் இருந்த மக்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதற்கு ஒரு வாய்ப்பைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவு (ரோமர் 1:5, 8; கொலோ. 1:5, 6; 1 தெச. 1:8ஐக் காணவும்).

## வரைவட்டவணை 1: மத்தேயு 24ன் நேர்மாறுகள்

| **எருசலேமின் அழிவு** *(மத். 24:4-35)* | **கிறிஸ்துவின் இரண்டாம் வருகை** *(மத். 24:36-41)* |
|---|---|
| *உபத்திரவத்தின் காலங்கள் முன்னதாக வரும் (வ. 5-12).* | *சாதாரண காலங்களே முன்னதாக வரும் (நோவாவின் நாட்கள் போல; வ. 37-39).* |
| *கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ளக்கூடிய குறிப்பிட்ட அடையாளம் இருக்கும் (எருசலேம் நகரம் படைகளால் சூழப்படும் [வ. 15; லூக். 21:20]).* | *எச்சரிக்க அடையாளம் எதுவுமிராது; காலத்தை ஒருவரும் அறிய முடியாது (வ. 36); அது ஒரு திருடன் அறிவியாமல் வருவதுபோல் (வ. 43) எதிர்பாராததாக இருக்கும் (வ. 39).* |
| *மக்களால் இந்த நிகழ்விலிருந்து தப்பியோட முடியும் (வ. 16).* | *மக்களால் இந்த நிகழ்விலிருந்து தப்பியோட முடியாது (ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார், ஒருவர் விடப்படுவார்; வ. 40, 41).* |

## வரைவட்டவணை 2: மத்தேயு 24ன் ஒரு வரைக்குறிப்பு

| சீஷர்களின் கேள்விகளின் இரண்டு தொகுப்புகள் வ. 3 | எருசலேமின் அழிவு பற்றி இயேசுவின் வலியுறுத்தம் வ. 4-35 | | | | | இரண்டாம் வருகை பற்றி இயேசுவின் வலியுறுத்தம் வ. 36-51 |
|---|---|---|---|---|---|---|
| "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?" | வ. 4-14 அடையாள மற்றவைகள் தரப் படுகின்றன. | வ. 15-20 அடையாளம் கூறப் படுகிறது (லூக். 21:20). | வ. 21-28 எருசலேமின் அழிவைப் பற்றி ஒரு விவரிப்பு தரப்படுகிறது. | வ. 29-31 உடனடியாகத் தொடரும் நிகழ்ச்சிகள் உரைக்கப் படுகின்றன. | வ. 32-35 எப்பொழுது என்பதை வசனம் 34, கூறுகிறது: "இந்தச் சந்ததியில்." | |
| "உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" | | | | | | வ. 36-51 "அடையாளம் எதுவும் தரப்படாது!" |